# கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் கட்டத் தேர்தல்

# 71988 பேர் வேட்பு மனு தாக்கல்

# 49568 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு

# மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான நான்காம் கட்டத் தேர்தலில் 71988 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர் என்றும், இவர்களுள் 49568 நிர்வாகக்குழு உறுப்பினர்களாக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும், 4046 நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 9182 பேர் போட்டியிடுகின்றனர் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு :

## நான்காம் கட்டத் தேர்தல்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் ஐந்து நிலைகளில் நடைபெறும் என்றும், முதல் நிலையில் உள்ள 22192 சங்கங்களுக்கான தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையம் ஏற்கெனவே அறிவித்திருந்தது. இதற்கான அட்டவணையையும் வெளியிட்டிருந்தது. இதன்படி நான்காம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும் 5997 சங்கங்களில் கடந்த 15.04.2013 அன்று வேட்பு மனுக்கள் பெறப்பட்டன. மொத்தம் 71988 பேர் வேட்பு மனு தாக்கல் செய்தனர். வேட்புமனு பரிசீலனையின்போது 8419 வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. 63569 வேட்பு மனுக்கள் செல்லத்தக்க வேட்பு மனுக்களாக அறிவிக்கப்பட்டன. மறுநாள் 16.04.2013 அன்று 4819 வேட்பு மனுக்கள் திரும்பப் பெறப்பட்டன. இறுதியாக 58750 வேட்பு மனுக்கள் இருந்தன. இவர்களுள் 5120 சங்கங்களில் 49568 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களில் 6599 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 12852 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 30117 பேர் பொது ஒதுக்கீட்டின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 427 சங்கங்களில் ஒரு வேட்பு மனு கூட பெறப்படவில்லை.

**சங்கங்களில் வாக்குப்பதிவு**

நான்காம் கட்டத் தேர்தலில் 450 சங்கங்களில் 4046 நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கு 27.04.2013 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. 578 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இட ஒதுக்கீட்டின் கீழும், 866 பேர் மகளிருக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 2602 பேர் பொது இடத்திற்கான ஒதுக்கீட்டின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர். இதற்காக 9182 பேர் போட்டியிடுகின்றனர்.

**கூட்டுறவுச் சங்கங்களுக்கான முதல்நிலை – நான்காம் கட்டத் தேர்தல்**

**வேட்பு மனுத் தாக்கல் விபரம்**

| பதிவாளர் / செயற்பதிவாளர் பெயர் | நான்காம் கட்டத் தேர்தல் நடைபெற வேண்டிய சங்கங்கள் | வேட்பு மனுக்கள் பெறப்படாத சங்கங்கள் | வேட்பு மனு பெறப்பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப் பட்ட சங்கங்கள் | நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க 27.04.2013 அன்று தேர்தல் நடைபெற உள்ள சங்கங்கள் |
|---|---|---|---|---|---|
| கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 1972 | 33 | 1939 | 1669 | 270 |
| தொழில் வணிகத்துறை ஆணையர் | 33 | 1 | 32 | 30 | 2 |
| மீன் வளத்துறை ஆணையர் | 886 | 18 | 868 | 756 | 112 |
| கதர் கிராமத் தொழில் வாரிய முதன்மை செயல் அலுவலர் | 54 | - | 54 | 53 | 1 |
| கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் | 328 | 3 | 325 | 304 | 21 |
| பால்வளத்துறை ஆணையர் | 2383 | 365 | 2018 | 1983 | 35 |
| பதிவாளர் (வீட்டுவசதி) | 214 | 7 | 207 | 199 | 8 |
| பனைவெல்ல அபிவிருத்தி வாரியம் | 127 | - | 127 | 126 | 1 |
| மொத்தம் | **5997** | **427** | **5570** | **5120** | **450** |

## வாக்கு எண்ணிக்கை

நான்காம் கட்டத் தேர்தலில் 27.04.2013 அன்று வாக்குப்பதிவு நடைபெறும். 30.04.2013 அன்று வாக்குகள் எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்படவுள்ளன.

## தலைவர், துணைத் தலைவர் தேர்வு

முதல் கட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க நடைபெற்ற தேர்தல் 5115 சங்கங்களில் முடிவு பெற்றுவிட்டதால் இச்சங்கங்களில் தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 16.04.2013 அன்று நடைபெற்றது. மொத்தம் 5104 பேர் தலைவர்களாகவும், 5096 பேர் துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவர்களில் 325 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் ஆவர். 695 பேர் பெண்கள் ஆவர். 4084 பேர் பொதுப்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். துணைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளவர்களில் 462 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் ஆவர். 1024 பேர் பெண்கள் ஆவர். 3610 பேர் பொதுப்பிரிவின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தலைவர் தேர்தலுக்கு 11 சங்கங்களிலும், துணைத்தலைவர் தேர்தலுக்கு 19 சங்கங்களிலும் யாரும் போட்டியிடாததால் இந்த இடங்கள் காலியாக உள்ளது.

## மே 9–ல் பதவி ஏற்பு

முதல்நிலையில் முதல் கட்டத் தேர்தல் திட்டத்தில் இடம் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களில் மட்டுமே தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 16.04.2013 அன்று நடைபெற்றுள்ளது. இரண்டாம் கட்டத்தில் உள்ள சங்கங்களுக்கான தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் 23.04.2013 அன்றும், மூன்றாம் கட்டத்தில் உள்ள சங்கங்களுக்கான தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் 30.04.2013 அன்றும், நான்காம் கட்டத்தில் உள்ள சங்கங்களுக்கான தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் 06.05.2013 அன்றும் நடைபெறவுள்ளது. எனவே நான்கு கட்டங்களில் தேர்தல் நடைபெறும் சங்கங்களில் தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தல் நடைபெற்று முடிந்தவுடன், அனைத்து சங்கங்களின் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் 09.05.2013 அன்று பொறுப்பு ஏற்பார்கள். அதன் பின்னர் அவர்கள் தங்களின் நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்டி தங்களின் இணைப்புச் சங்கங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து தீர்மானம் இயற்றி அனுப்புவார்கள்.

**இரண்டாம் கட்ட தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவுகள்**

இரண்டாம் கட்டத்தில் 12.04.2013 அன்று வாக்குப்பதிவு நடைபெற்ற 276 சங்கங்களில் வாக்கு எண்ணிக்கை 16.04.2013 நடைபெற்றது. பதிவான வாக்குகள் 136317 ஆகும். செல்லுபடியாகாத வாக்குகள் 27408 ஆகும். செல்லுபடியாகக் கூடிய வாக்குகள் 108909 ஆகும். இந்த வாக்கு எண்ணிக்கையின் முடிவில் 2600 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுள் 423 பேர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின ஒதுக்கீட்டின் கீழும், 647 பேர் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழும், 1530 பேர் பொதுப்பிரிவின் கீழும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்டத் தேர்தலில் ஏற்கெனவே 4575 சங்கங்களில் 44057 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் கட்டத்தில் இடம் பெற்றுள்ள சங்கங்களில் தலைவர் / துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 23.04.2013 அன்று நடைபெறவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

19.4.13

ஆணையர்